மாலை முரசு

பக்கங்கள் 16 + 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 07 புதன்கிழமை 21.05.2024 | அதிர்வு 291

## கெஹலியவின் மகனும் கைது!

**ஜூன் 3 வரை விளக்கமறியல்**



முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெல, இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்களை 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# யாழில் 769 வழித்தட சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகள் இன்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 769 வழித்தட சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் இருந்து புறப்படும் 764 வழித்தட பஸ்கள் கடந்த காலங்களில், வசாவிளான் சந்தியில் இருந்து, பருத்தித்துறை – பொன்னாலை வீதி வரையிலான பலாலி வீதி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்டமையால், வசாவிளான் சந்தியுடன் 02



**அரசின் தற்காலிக இடைநிறுத்தம் தீர்வைத் தராது**

# வர்த்தமானி அறிவிப்பு உடன் வாபஸ் பெறப்பட வேண்டும்!

**ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மீள வலியுறுத்து**

வடக்கு மாகாணத்திலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது எந்தவொரு தரப்பினருக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத்தராது எனச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், எனவே அந்த வர்த்தமானி அறிவித்தல் 03





# பாடசாலை சென்ற மாணவி பட்டா ரக வான் மோதி சாவு!

**முல்லைத்தீவில் சோகம்**

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, கர்நாட்டுக்கேணிப் பகுதியில் இன்று காலை பட்டா ரக வாகனம் மோதி பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கர்நாட்டுக்கேணி அ.த.க. பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் எட்டு வயதுடைய மாதீஸ்வரன் நர்மதா என்ற மாணவியே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, கொக்கிளாய் 03









## யாழில் 769...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது சேவைகளை மட்டுப்படுத்தி இருந்தன.

அதனால் மயிலிட்டி பகுதியில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, யாழ்ப்பாணம் நகரில் இருந்து புறப்படும் 769 வழித்தட பஸ்கள் மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட்டன.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்லும் பலாலி வீதி திறக்கப்பட்டுள்ளமையால், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 764 வழித்தட பஸ்கள் யாழ்ப்பாணம் நகரில் இருந்து புறப்பட்டு பலாலி வீதியூடாக பருத்தித்துறை – பொன்னாலை வீதியை அடைந்து அதனூடாக காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள பஸ் நிலையம் வரையில் சேவையில் ஈடுபடுகின்றன.

இந்நிலையில் 769 வழித்தட அனுமதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தாம் இதுவரை காலமும் மயிலிட்டியில் இருந்து சேவையை ஆரம்பித்தது போன்று ஆரம்பிக்கவும், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு, காங்கேசன்துறை வீதி வழியாக மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் எனவும் கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி வடக்கு மாகாணஆளுநர் தலைமையில் தனியார் பஸ் சேவை வழித்தடம் தொடர்பான கூட்டம் இடம்பெற்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எனவே, குறித்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாட ஆளுநர் போராட்ட இடத்துக்கு வர வேண்டும் என்று பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இறுதியாக பொலிஸார் தலையிட்டு வழமை போன்று சேவையில் ஈடுபடுமாறு கூறியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.





# 3 வாகனங்கள் மோதி விபத்து! ஏழு பேர் வைத்தியசாலையில்!!

(க.மகாதேவன்)

சிலாபம் – கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

சிலாபம் – கொழும்பு பிரதான வீதியிலுள்ள இனிகொடவெல ரயில் கடவைக்கு அருகாமையில் இன்று புதன்கிழமை அதிகாலை 6.25 மணியளவில் சீமெந்து ஏற்றிய வாகனம், ஹயஸ் வான் மற்றும் பெற்றோல் ஏற்றும் வாகனம் ஆகிய மூன்று வாகனங்கள் மோதி விபத் துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது ஹயஸ் வாகனம் பாரிய சேதமடைந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த 7 பேரும் சிலாபம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







## வர்த்தமானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும் மீள வலியுறுத்தியுள்ளார்.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறு அரசை வலியுறுத்தியுள்ளனர். அதனையடுத்து அந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரசு அறிவித்துள்ளது.

இருப்பினும் எவரேனும் காணிகளுக்கான உரிமையை நிறுவுவதற்குத் தவறும் பட்சத்தில் அல்லது காணிகளுக்கு உரிமை கோராதவிடத்து, அந்தக் காணிகள் கட்டாயமாக அரசுடைமையாக்கப்படவேண்டும் என காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவில் வலியுறுத்தப்பட்டிருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, அரசு அறிவித்துள்ளவாறு தற்காலிக இடைநிறுத்தம் எந்தவொரு தரப்பினருக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத் தராது எனவும், ஆகையினால் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல் முழுமையாக வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## கெஹலியவின்...

விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரமித் ரம்புக்வெலவின் தந்தையான கெஹலிய ரம்புக்வெல இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக் காகக் கடந்த 7ஆம் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையாகியபோது ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் இலஞ்சம், ஊழல் வழக்கில் ரமித் ரம்புக்வெல நேற்று நீதிமன்றத்தால் சந்தேகநபராகப் பெயரிடப்பட்ட நிலையில், இலஞ்சம், ஊழல் குற றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரமித் ரம்புக்வெலவுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதன்படி ரமித் ரம்புக்வெல இன்று காலை இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஆரஜாகியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெல அமைச்சின் நிதியிலிருந்து சுமார் 8 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**விளக்கமறியலில்**

கைதான ரமித் ரம்புக்வெல இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் இன்று பிற்பகல் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கர்நாட்டுக் கேணிப் பகுதியில் இன்று புதன்கிழமை காலை 7 மணியளவில் மேற்படி மாணவி பாடசாலைக்குச் செல்லும் வழியில் விபத்தில் சிக்கி சாவடைந்துள்ளார்.

அந்த மாணவி வீதிக்கு மறுபக்கத்தில் சென்று கொண்டிருந்த பணிஷ் வாகனத்தில் பணிஷ் ஒன்றை வாங்கிவிட்டு திரும்பிச் சென்றபோது கொக்குளாயில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற பட்டா ரக வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவி முல்லைத்தீவு மாவட்ட வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதியான புத்தளம் பகுதியைச் சேர்ந்த நபரை கொக்கிளாய் பொலிஸ் கைது செய்துள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் வேளைகளில் குறித்த கர்நாட்டுக் கேணிப் பகுதியில் பொலிஸ் யாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொக்குத்தொடுவாய் பகுதியில் விபத்தை ஏற்படுத்தியிருந்தார் என்றும், அதில் ஒருவர் உயிரிழந்திருந்தார் என்றும் அந்தப் பகுதி மக்களால் கூறப்படுகின்றது.

# அதிவேக நெடுஞ்சாலைகளில் வங்கி அட்டைகள் மூலம் பணம்!

## செலுத்தும் நடைமுறை இன்றுமுதல்

அதிவேக நெடுஞ்சாலைகளில் வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதி இன்று (21) முதல் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 35 இடை மாறல்கள் மற்றும் 119 வெளியேறும் வாயில்களில் இன்று முதல் இந்த சேவை வசதிகள் செயற்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை அறிவித்துள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம – குருநாகல் பகுதியின் வெளியேறும் வாயில்களில் வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் திறமையான போக்குவரத்து சேவையை நிறுவுவதற்கும், புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கையை எளிதாகவும் வேகமாகவும் மாற்றுவதற்கும், அரசின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கையின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி இது ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.




# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வென்ற 40 வீதமானோர் விவரம் கிடைக்கவில்லை!

## விசனம் தெரிவிக்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வட்டார மட்டத்தில் வெற்றி பெற்ற வேட்பாளர்களில் 40 சதவீதத்தினரின் பெயர்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், உறுப்பினர்களின் எண்ணிக்கையை வர்த்தமானி மூலம் வெளியிட வேண்டியிருப்பதால், தொடர்புடைய வேட்பாளர்களின் பெயர்களை உடனடியாக அனுப்புமாறு அந்தப் பிரிவினரிடம் கோரிக்கை விடுக்கிறார் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஆரம்பமாகிறது. அதற்கு முன்னர் உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானி மூலம் வெளியிடும் பொறுப்பு என்னிடம் உள்ளது.

அதற்கு உங்களின் பெயர்கள் கிடைப்பது மிகவும் முக்கியமானது. பெயர்களைப் பெற்று வர்த்தமானி செய்த பின்னரே, 50 வீதத்துக்கும் குறைவாக வெற்றி பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு தலைவர் அல்லது பிரதித் தலைவர் நியமனம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

பெயர்கள் வர்த்தமானி செய்யப்பட்டு ஒரு வாரத்துக்குள் மாகாண ஆணையாளர்கள் இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும்.- என்று மேலும் தெரிவித்தார்.



# ‘இசை நடன இரவு’ சனிக்கிழமை!

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நுண்கலைப் பாடங்களைப் பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக நடத்தப்படுகின்ற ‘ இசை நடன இரவு’ என்ற மாபெரும் நிகழ்ச்சி எதிர்வரும் (24) சனிக்கிழமை மாலை 6.30 மணிமுதல் இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான அனுமதிகளைப் பார்வையாளர்கள் திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் விரைவில் கடவுச் சீட்டு அலுவலகம்!

## அலுவலகம் அமைப்புப் பணிகள் மும்முரம்

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலக புனரமைப்பு வேலைகள் தொடர்பான முன்னேற்றக் கலந்துரையாடல் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச் சீட்டு அலுவலகத்தின் புனரமைப்பு வேலைகளை விரைவாக நிறைவேற்றி முடிக்க வேண்டிய தேவைப்பாடுகளை மாவட்ட செயலர் இதன்போது வலியுறுத்தினார்.

மேலும், ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளின் முன்னேற்றத்தை ஒவ்வொன்றாக ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

இக் கூட்டத்தைத் தொடர்ந்து, கடவுச் சீட்டு அலுவலகம் அமையவுள்ள இடத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளை நேரடியாக ஆய்வு செய்தார். வேலைகளை விரைவுபடுத்துவது தொடர்பாகவும் பணிப்புரைகள் வழங்கப்பட்டது.

அதன் போது, மேலதிக அரச அதிபர் (காணி) க. ஸ்ரீமோகனன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், பிரதம பொறியியலாளர் கே. திருக்குமார், உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி, நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அடுத்த தந்திரம்

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை சுவாஹா செய்வதற்கு - கபளீகரம் பண்ணுவதற்கு - தந்திரமாகக் காய் நகர்த்தியிருக்கும் அநுர குமார திஸநாயக்கா தலைமையிலான சிங்கள - பௌத்த பேரினவாத அரசு, அந்த எத்தனத்துக்கு எதிராக தமிழ் மக்களின் எதிர்ப்புக் கடுமையாகக் கிளம்பியிருப்பதன் பின்னணியில், அதைச் சமாளிப்பதற்கும் அதனை ஒட்டி தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றுவதற்கும் அடுத்த கட்டத் தந்திரத்தை ஆரம்பித்திருக்கின்றது.

அந்தக் காணி கபளீகரத்துக்கு வழி செய்யும் வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசாங்கம் அறிவித்துள்ளது. அதுதான் அரசின் அடுத்த கட்ட ஏமாற்றுத் தந்திர வேலை.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது எந்தவொரு தரப்பினருக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத்தராது எனச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், எனவே அவ்வர்த்தமானி அறிவித்தல் முழுமையாக வாபஸ் பெறப்படவேண்டும் என மீளவலியுறுத்தியுள்ளார்.

மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் கீழ் சம்பந்தப்பட்ட காணிகளுக்கான உரிமையை நிறுவுவதற்குத் தவறும் பட்சத்தில் அல்லது காணிகளுக்கு உரிமை கோராதவிடத்து, அக்காணிகள் கட்டாயமாக அரசுடைமையாக்கப்படவேண்டும் என காணி நிர்ணய கட்டளைச்சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவில் வலியுறுத்தப்பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆகவே, அரசாங்கம் அறிவித்துள்ளவாறு தற்காலிக இடைநிறுத்தம் எந்தவொரு தரப்பினருக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத்தராது, ஆகையினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் முழுமையாக வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும் சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

''காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இந்த வர்த்தமானியை இடைநிறுத்த முடியாது. அதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏதும் கிடையாது. மூன்று மாத காலத்துக்குள் உரித்துக்களை உறுதிப்படுத்தாவிடின் தமிழ் மக்களின் தனியார் காணிகள் மற்றும் பொதுக்காணிகள்அரசுடமையாக்கப்படும் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும். ஆகவே இந்த வர்த்தமானியை மீளப்பெற வேண்டும். அதுவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழி'' - என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியும் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

தமிழ் மக்களின் காணிகளைப் பிடுங்கும் இந்த அரச அடாவடித்தனம் இங்கு அரங்கேறும் போது, ஆளும் தரப்புக்குச் செம்பு காவும் மூன்று யாழ் மாவட்ட எம்.பிக்களும், நியமன எம்.பி. பதவி மூலமான ஓர் அமைச்சரும் இவ்விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்காமல் பம்மிக் கொண்டிருக்கின்றனர். இப்போதாவது உண்மையை உணர்ந்து - ஆளுந்தரப்புக்கு சாமரம் வீசும் சின்னத்தனத்திலிருந்து வெளியே வந்து - அவர்கள் தமிழ் மக்களின் உரித்துக் குறித்துக் குரல் எழுப்ப வேண்டும். அதுதான் தங்கள் மக்களுக்கு அவர்கள் செய்யக் கூடிய நியாயமாகும்.




# அதிக சிறுவர்கள் இல்லங்களுக்கு பராமரிப்பதில் பெரும் சவால் நிலை!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

சிறுவர் இல்லங்களை நோக்கி அதிக சிறுவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். அது எமக்கும் சிறுவர்களை பராமரிக்கும் நிறுவனங்களுக்கும் சவாலாக உள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் அமைந்துள்ள எஸ்.ஓ.எஸ். தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்கை நெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான என்.வி.கியூ. தரச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு, தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று (20) நடைபெற்றது.

நிகழ்வில் மாணவர்களுக்கான சான்றிதழ்களை ஆளுநர் வழங்கி வைத்த பின்னர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் இல்லங்களை நோக்கி அதிக சிறுவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். காலத்தின் சூழலாக அது மாறியிருக்கின்றது. அது எமக்கும் சிறுவர்களை பராமரிக்கும் நிறுவனங்களுக்கும் சவாலாக உள்ளது.

எஸ்.ஓ.எஸ். தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்கள் தங்கள் தொழில்துறையை எப்படி அமைத்துக்கொள்கின்றார்கள் என்பதில்தான் இந்தப் பயிற்சியின் வெற்றி தங்கியிருக்கின்றது.

என்.வி.க்யூ. தரச் சான்றிதழைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கும் வேலை வாய்ப்புக்காக செல்ல முடியும். மேலும் கற்கைகளையும் தொடரமுடியும். இந்தச் சான்றிதழைப்பெற்று தொழில் தகைமையுள்ளவர்களாக மாறியுள்ள நீங்கள், நாளை பலருக்கு தொழில் வாய்பை வழங்கக் கூடிய தொழில் முனைவோராகவும் மாறவேண்டும்.

அதேபோல இந்த நிறுவனம் தொழிற்பயிற்சி பெற்றுக்கொள்ள வருகின்ற தூர பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு விடுதி அமைத்துக்கொடுப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளமையை வரவேற்கின்றேன்.– என்றார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் சுஜீவா சிவதாஸ் கௌரவ விருந்தினராகவும், எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராம தேசிய இயக்குநர் திவாகர் ரட்ணதுரை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

# நாற்பது ஆண்டுகளாக செயற்பட்டு வந்த ஆடைத் தொழிற்சாலை திடீரென மூடல்!

## 1400 பணியாளர்கள் செய்வதறியாது திண்டாட்டம்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளாக செயற்பட்டு வந்த 'நெக்ஸ்ற்' ஆடைத்தொழிற்சாலை திடீரென மூடப்பட்டதால் 1,400 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள நிலையில் பாதிகிகப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களின் தகவலின்படி, மே 19 ஆம் திகதி இரவு வாட்ஸ்அப்பில் வந்த செய்தி மூலம் தொழிற்சாலை உடனடியாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இயங்கும் செலவுகள் அதிகரித்தமை மற்றும் தொடர்ந்த நஷ்டங்களை எதிர்கொண்டுள்ளமை காரணமாக மூடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தமாக 2,825 பணியாளர்களில் 1,416 பேர் இந்த முடிவால் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஏனைய பணியாளர்கள் தொடர்ந்து வேலை செய்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம் இரண்டு மாத சம்பளத்துடன் இறுதி வேதன தொகையை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த முடிவு தொழிலாளர்களுடனான ஒப்பந்தங்களை மீறுவதாகவும், முன்பாகவே அறிவிப்பின்றி எடுக்கப்பட்டதாகவும் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

# மின்சாரக் கம்பியில் சிக்கி 11 வயது சிறுமி உயிரிழப்பு!

வீட்டில் மின்சாரக் கம்பியில் சிக்கி சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கண்டி, வெலம்பொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில்கந்த பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கோவில்கந்த, வட்டப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 11 வயதுடைய சிறுமி ஆவார்.

சம்பவ தினத்தன்று சிறுமி தனது வீட்டின் மேல் மாடிக்குச் சென்று ஏணி ஒன்றில் ஏறியபோது அருகிலிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. உயிரிழந்த சிறுமியின் சடலம் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலம்பொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்குக் கடத்தவெனப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூ.50 லட்சம் மதிப்புள்ள சுறா துடுப்புகள், சுக்கு, செருப்பு!

## மண்டபம் பகுதியில் பொலிஸாரால் மீட்பு



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மண்டபம் அடுத்த மரைக்காயர் நகரப் பகுதியில் கொலைச் சந்தேக நபர் ஒருவரைத் தேடிச் சென்ற பொலிஸார், கடற்கரை அருகே வீட்டின் பின்புறம் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த, 50 லட்சம் ரூபா மதிப்புள்ள சுறா துடுப்புகள், சுக்கு, செருப்பு அடங்கிய 23 பொதிகளை மீட்டுள்ளனர்.

அவற்றை மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர்கள் தனிப்பிரிவினர் நேற்று (20) மீட்டுள்ளனர். அந்த வீட்டின் உரிமையாளரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அடுத்த தினைக்குளம் கடற்கரையில் கடந்த சனிக்கிழமை (17) இரவு ராமநாதபுரம் சின்ன கடை பகுதியை சேர்ந்த செய்யது அப்துல்லா என்பவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

உடலை மீட்ட பொலிஸார் நடத்திய விசாரணையில் செய்யது அப்துல்லா கொலை செய்யப்பட்டமை தெரியவந்தது.

இதையடுத்துக் கொலை செய்த நபர்களைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

இந்த விசாரணையில் சந்தேகநபரான ஆசிப் என்பவரது வீடு பூட்டப்பட்டிருந்ததால் வீட்டின் பின்புறம் உள்ள கடற்கரை வழியாக வீட்டுக்குள் சென்ற பொலிஸார் இந்தப் பொருள்களை மீட்டுள்ளனர்.பொதிகளை எடுத்துப் பொலிஸார் சோதனை செய்தபோது அதில் 15 பொதிகளில் சுறா துடுப்புகள், 4 பொதிக ளில் சுக்கு, ஏனைய 4 பொதிகளில் செருப்புகள் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நல்லூர் ஆலயச் சூழலில் அசைவ உணவகம்; கண்டனம் வெளியிட்டது சர்வதேச இந்துமத பீடம்

புனித இடமாக உலகெங்கும் வாழும் இந்து மக்களால் போற்றப்படும் நல்லூர் ஆலய சூழலில் அசைவ உணவகம் அமைக்கப்பட்டிருப்பது மிகுந்த கண்டனத்துக்கு உரியது என்று சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

சைவத்தையும் தமிழையும் கட்டி காத்த நாவலர் பெருமான் பிறந்த இடம். அதே போல் உலகவாழ் இந்துக்களால் புனிதமாக போற்றப்படும் நல்லூர் கந்தசுவாமி வீற்றிருக்கும் இடம்.

அந்த வகையில் ஒருபோதும் இல்லாதவாறு, மாநகர சபை ஆணையாளரின் அனுமதி இன்றி இந்த அசைவ உணவகம் திறந்திருக்க முடியாது.

எனவே யாழ். மாநகர சபை இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் சைவத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். எனவே அவர் உடனடியாக இதற்கான தீர்வை மேற்கொள்ள வேண்டும் என பாபுசர்மா தனது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.



# இந்தியாவைச் சேர்ந்த சுவாமி ஒருவரை திருக்கோவிலுக்கு வரவழைத்த முருகன்!

(வி.ரி.சகாதேவராஜா)

இந்திய சுவாமிகள் கனவில் முருகன் தோன்றி தரிசனமளித்து கூறியதற்கமைவாக தான் இலங்கை வந்து, அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் ஆலயத்துக்கு வந்துள்ளார் என்று இந்தியாவைச் சேர்ந்த சுவாமி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஆந்திரா பிரதேசத்தில் பல ஆதீனங்களுக்கு பொறுப்பாக இருக்கும் சுவாமி ராமானந்த சரஸ்வதி என்ற சுவாமியே இவ்விதம் திருக்கோவிலுக்கு விஜயம் செய்ய ஈர்க்கப்பட்ட வராவார் .

இந்தியாவிலுள்ள சுவாமிகளுக்கு, ஒருநாள் அவரது கனவில் முருகப் பெருமான் தோன்றி இலங்கையில் கடலுக்கு அருகே ஒரு முருகன் ஆலயமுள்ளது. அந்த ஆலயத்தின் ராஜகோபுரம் அரைகுறையாக கிடக்கிறது. அதனைச் சென்று பார்த்து அதனை நிவர்த்தி செய்வாயாக என்று தோத்திரம் (வாக்கு) அளித்திருக்கின்றார்.

முருகப்பெருமான் கூறிய ஆலயம் எதுவென்று தெரியாமல் சுவாமிகள் பலருடனும் தொடர்பு கொண்ட பொழுது பலனளிக்கவில்லை. இந்த ஆலயம் இலங்கையினல் எப் பாகத்தில் இருக்கின்றது என்பதனையும் அவரால் அறிய முடியவில்லை.

இறுதியாக கதிர்காம பாதயாத்திரீகர்களுடன் ஒருவாறு தொடர்பை ஏற்படுத்தி அவர்களூடாக அது அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் என்று அற்ந்துள்ளார்.

அதன் பின்னர் திருக்கோவில் ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்களோடு நேரடியாக தொடர்பு கொண்டார் சுவாமி.

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் ராஜகோபுரம் பல வருடங்களாக அரைகுறையாக காணப்படுகின்றது என்று செய்தி அவருக்கு கிடைக்கப்பெறுகின்றது.

மறுகணமே அவர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து முதல் தடவையாக அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவிலுக்கு விஜயம் செய்தார்.

அங்கு சென்று ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் மற்றும் குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் மற்றும் தலைவர் சு.சுரேஸ் தலைமையிலான ஆலய நிர்வாகத்தினரை சந்தித்தார்.

குறித்த இராஜகோபுர தளத்திலேயே ஏறி நின்று இதனை எவ்வாறாவது முடித்தாக வேண்டும் இதற்குரிய ஏற்பாடுகளை நான் செய்கின்றேன் என்று கூறி, இந்தத் தள அமைப்பு வேலைகளுக்காக முதற்கட்டமாக நாற்பது லட்சம் ரூபாவை தருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

குருக்களும் ஆலய நிர்வாகத்தினரும் அசந்து போனார்கள். இதுவரை 10 லட்சம் ரூபா வழங்கி இருக்கின்றார். விரைவில் மீதியும் வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலே வடகோடியிலிருந்தத சுவாமியை இலங்கைக்கு – அதுவும் திருக்கோவிலுக்கு அழைத்த முருகப் பெருமானின் இந்த அற்புதத்தை என்னவென்று சொல்வது. அவர் மூன்றாவது தடவை கடந்த வாரம் நேரடியாக வந்து ஆலயத்தை தரிசித்து அங்குள்ள அடியார்களுக்கு நிதியும் வழங்கி அன்னதானமும் வழங்கினார்.





# இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் யாழில் உயிரிழந்துள்ளார்!

யாழ்ப்பாணத்தில் இரத்த வாந்தி எடுத்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (20) இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் – கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

இந்த நபர் மது மற்றும் புகை பழக்கத்துக்கு அடிமையானவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், நேற்று (20) அதிகாலை நான்கு மணியளவில் உடல் சுகயீனம் ஏற்பட்டு இரத்த வாந்தி எடுத்துள்ளார்.

பின்னர் காலை ஐந்து மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார்.







# மூதூர் - மேன்காமம் குளத்துக்கான வாய்க்கால் திருத்தப் பணி நிறைவு!

**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் – மேன்காமம் குளத்துக்கான வாய்க்கால் புனரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் குளத்தை எல்லைப்படுத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை முடிவுறுத்தப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல் குளம் புனரமைப்பது தொடர்பாக மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், மத்திய நீர்ப்பாசத் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்டோர் ஏற்கனவே பார்வையிட்டுச் சென்றுள்ளனர். எது எவ்வாறாயினும் இந்த அர சாங்கத்திலாவது குளம் புனரமைக்கப்பட்டு, குளத்தை நம்பி இருக்கும் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுவதோடு நாட்டின் பொருளாதாரமும் உயர்த்தப்பட வேண்டும் என பிரதேச விவசாயிகள் கூறுகின்றனர்.

மேன்காமம் குளம் புனரமைப்பு தொடர்பில் அக்கறையுடன் செயற்பட்டு உரிய தரப்பினருக்கு உரிய அழுத்தங்களை வழங்கி வருகின்ற வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் செயற்பாட்டுக்கும் விவசாயிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.



# பொது இடத்தில் வைத்துச் சகோதரனை வாளால் வெட்டியவர் மடக்கிப் பிடிப்பு!

பதுளையில் நகரப் பகுதியில் சகோதரன் ஒருவரை வாளாள் வெட்டிய நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வந்துள்ளதாவது,

இருவருக்கிடையில் வாள் வீச்சு தாக்குதல் சம்பவம் நேற்று (20) பதுளை நகர மையத்தில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

பதுளை தெயியனாவெலவை பிரதேசத்தை சேர்ந்த சகோதரர்கள் இருவர்களுக்கு இடையிலேயே இந்தத் தகராறு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வீதியில் வைத்துத் தனது தம்பி மீது நபரொருவர் சுமார் பத்து நிமிடங்கள் வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளார்.

யாராவது அருகில் வந்தால் அவர்களையும் வெட்டுவேன் என தாக்கிய நபர் எச்சரித்த நிலையில், அருகில் எவரும் செல்லவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் பதுளை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சாரதி மற்றும் சார்ஜென்ட் நிலந்த ஆகியோர் அங்கு வந்து, சந்தேக நபரின் வார்த்தைகளுக்கு அஞ்சாமல், சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

இதையடுத்து, வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நபர் பதுளை மாகாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக, பதுளை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் மற்றும் குற்ற தடவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலிகளை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு பாதுகாப்பு வழங்குகிறது அநுர அரசாங்கம்!

## இராணுவத்தினரை நினைவு கூர இடையூறு என்றும் நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் அநுர அரசு இராணுவத்தினரை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு இடையூறு விளைவிக்கிறது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், நாட்டின் இராணுவ வீரர்களுக்காகவும், ஒற்றையாட்சிக்காகவும் என்றும் நாம் முன்னிற்போம். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசின் கொள்கைகளில் இராணுவத்தினருக்கு முன்னுரிமை இல்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தனியார் விமானத்தில் வியட்நாமிலிருந்து வருகை தருமளவுக்குத் தேர்தலுக்கு வழங்கிய முக்கியத்துவத்தை, ஜனாதிபதி இராணுவ வீரர்களுக்கும் வழங்க வேண்டும்.

அதேவேளை, யுத்தத்தில் உயிர் நீத்த படை வீரர்களை நினைவு கூரும் நிகழ்வுக்கு சகல முன்னாள் அரச தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஆனால் இராணுவத்தினரை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு அரசால் இடையூறு விளைவிக்கப்படுகிறது.

நல்லாட்சி அரசில் இராணுவத்தினர் பழி வாங்கப்பட்டனர். புலனாய்வுப் பிரிவு வீழ்ச்சியடைந்தது. அதன் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றன.

தற்போது பாதாள உலகக் குழுக்கள் தலைதூக்கியுள்ளன.புலனாய்வுப் பிரிவை பலவீனப்படுத்திவிட்டு தேசிய பாதுகாப்பு தொடர்பில் வகுப்பெடுப்பதில் பயன் இல்லை.

எனவே புலனாய்வுப்பிரிவை மீண்டும் பலப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசுமுன்னெடுக்க வேண்டும்.– என்றார்.

# தங்க முலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி: சந்தேகத்தில் இரண்டு பெண்கள் கைது!



ஹெவ்லொக் சிட்டி வீடமைப்பு தொகுதியில் நேற்று மீட்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட ரி- 56 ரக துப்பாக்கி தொடர்பில் பெண்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பத்தரமுல்லையை சேர்ந்த 40 வயதுடைய ஒருவரும் வெள்ளவத்தையை சேர்ந்த 68 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை இன்று கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.





# யால தேசிய பூங்காவின் புஞ்சிகந்த காட்டில் 50 மில்லியன் ரூபா பெறுமதியான கஞ்சா!

## இனங்கண்டு அழித்தது மொனராகலை பொலிஸ்!!

மொனராகலை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கோனகனார பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யால தேசிய பூங்காவின் புஞ்சிகந்த பகுதியில் நடுக் காட்டில் பயிரிடப்பட்ட கஞ்சா பண்ணை கண்டுபிடிக்கப்பட்டது.

மொனராகலை பொலிஸ் பிரிவு ஊழல் தடுப்புப் பிரிவினரால் நடத்தப்பட்ட சோதனையின் போது இது அகப்பட்டது.

இரண்டரை ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட கஞ்சா பண்ணையில் ஐந்து முதல் ஆறு அடி உயரம் வரை கஞ்சா செடிகள் வளர்ந்திருந்தன. பொலிஸ் அதிகாரிகள் வந்தபோது, கஞ்சா தோட்டத்தின் உரிமையாளர் தப்பி ஓடிவிட்டார். அவர் அடையாளம் காணப்பட்டு, அவரைக் கைது செய்ய பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கஞ்சா பண்ணை வெட்டப்பட்டு, எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. மேலும் கஞ்சா செடிகளின் ஒரு பகுதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்காக கோனகனாரா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கஞ்சா பண்ணையின் சந்தை மதிப்பு சுமார் ஐம்பது மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.





# வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் வறிய குடும்பங்களுக்கு வீடுகளமைப்பு!

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியான வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 10 வீட்டுத் திட்டங்களுக்கு அத்திபாரம் இடப்பட்டுள்ளது.

கனடா – இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம் ஏற்பாட்டில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மகிழவெட்டவான் மற்றும் செங்கலடி பகுதிகளிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உதவும் பொற்கரங்கள் அமைப்பின் தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழு பேச்சாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் வட அமெரிக்கா தமிழ் சங்கத்தின் உறுப்பினர் சிவம் வேலுப்பிள்ளை,கனடா விபுலானந்தர் கலைமன்றத்தின் தலைவர் வல். கந்தையா புருஷோத்தமன், சமூக செயற்பாட்டாளர் வி.விஜயராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மிகவும் வறிய நிலையில் தகர கொட்டில்களில் வாழும் குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம் கனடா அமைப்பானது கடந்த 12வருடமாக வடக்குக் கிழக்கில் பல்வேறு சமூக நல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# திகாமடுல்ல மீடியா போரம் உதயம்!

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்களில் கடமையாற்றும் ஊடகவியாளர்கள், பிராந்திய செய்தியாளர்கள் மற்றும் சுயாதீன மற்றும் ஏனைய ஊடகவியலாளர்களின் நலன் கருதி “திகாமடுல்ல மீடியா போரம்” எனும் அமைப்பு உதயமாகியுள்ளது.




இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (19) அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

அத்துடன் உத்தியோக பூர்வமான நிர்வாக சபையும் சபையோரின் ஏகோபித்த பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டது.

தலைவராகச் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எப். றிபாஸ், பொதுச் செயலாளராக எஸ்.சினீஸ்கான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# மகாராஷ்டிராவில் 52 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

## சுகாதாரத்துறை எச்சரிக்கை



மகாராஷ்டிராவில் தற்போது கொரோனா பாதிப்பு காரணமாக லேசான அறிகுறிகளுடன் 52 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதே நேரத்தில் 16 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அம்மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் மகாராஷ்டிராவில் கொவிட் 19 பாதிப்பு காரணமாக இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என மகாராஷ்டிர மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கொரோனா பாதித்து உயிரிழந்த இரண்டு பேரும் மும்பையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இணை நோய்களை கொண்டவர்கள். இறந்தவர்களில் ஒருவருக்கு ஹைபோகேல்சீமியா வலிப்புடன் நெஃப்ரோடிக் நோய் இருந்தது. மற்றொருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்.

மகாராஷ்டிராவில் ஜனவரி முதல் மொத்தம் 6,066 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் 106 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவற்றில் 101 பேர் மும்பையைச் சேர்ந்தவர்கள், மீதமுள்ளவர்கள் புனே, தானே மற்றும் கோலாப்பூரைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

தற்போது, லேசான அறிகுறிகளுடன் 52 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர், அதே நேரத்தில் 16 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இப்போது மகாராஷ்டிராவில் மட்டுமல்ல, பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளிலும் கூட கொவிட் 19 பாதிப்புகள் அதிகரித்து காணப்படுகிறது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# சுற்றுலாத்துறை மேம்பாடு; மோடி தலைமையில் ஆராய்வு

பஹல்காம் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது குறித்து பிரதமர் மோடி தலைமையில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா மேம்பட்டு வந்த நிலையில் பஹல்காமில் கடந்த மாதம் 22 ஆம் திகதி, பாகிஸ்தான் தீவிரவாதிகள் சுற்றுலா பயணிகள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் 26 பேர் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத மையங்கள் மற்றும் இராணுவத் தளங்கள் மீது ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா கடந்த 7 ஆம் திகதி மேற்கொண்டது. இதனால் ஏற்பட்ட இந்தியா – பாகிஸ்தான் போர் 4 நாள்கள் நீடித்தது. அதன்பின் இரு நாடுகள் இடையே கடந்த 10 ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதன் காரணமாக இந்தியாவின் வட மாநிலங்களில் சுற்றுலாத் துறை பாதிப்படைந்தது. ஜம்மு காஷ்மீரில் சுற்றுலாத்துறை மிக மோசமாக பாதிப்படைந்தது.

சுற்றுலா பயணிகள் பலர் தங்களின் முன்பதிவை ரத்து செய்தனர். இந்நிலையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது குறித்து பிரதமர் மோடி நேற்று ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இதில் மத்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றுலாத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர். இதில் சுற்றுலாத் துறையின் தற்போதைய திட்டங்கள், மேம்பாட்டுக்கு மேற்கொள்ள வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

# வீட்டுக்கூரை இடிந்து வீழ்ந்து மூன்று பேர் உயிரிழப்பு

## திருப்பரங்குன்றத்தில் சோகம்



திருப்பரங்குன்றம் அருகே கனமழையால் வீட்டுதிண்ணையின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

மதுரை திருப்பரங்குன்றம் அருகேயுள்ள வலையங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது.

அப்போது, முத்தாலம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த அம்மாபிள்ளை (வயது 65), அவரது பேரன் வீரமணி (வயது 10) மற்றும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த வீரணன் வெங்கட்டி (வயது 55) ஆகியோர் அம்மாபிள்ளையின் வீட்டு திண்ணையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

எதிர்பாராதவிதமாக திண்ணையின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்ததில் 3 பேரும் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். சப்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் மூவரையும் மீட்டு, வலையங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அனுப்பிவைத்தனர். அங்கு வெங்கட்டி உயிரிழந்தார்.

பின்னர், மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட அம்மாபிள்ளை, வீரமணி ஆகியோர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். விபத்து தொடர்பாக பெருங்குடி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# ஆசியாவில் மீண்டும் கொரோனா; இந்தியாவில் 257 பேர் பாதிப்பு

ஆசியாவில் மீண்டும் புதிய கொரோனா அலை உருவாகியுள்ளது. இந்தியாவில் கொரோனா தொற்றால் 257 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆசியாவில், குறிப்பாக தென்கிழக்கு ஆசியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகிறது. தற்போது பரவி வரும் ஒமைக்ரான் பிஏ.2.86 திரிபான ஜே.என்1 வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

மக்கள் தொகை நெருக்கம் மிகுந்த ஹொங்கொங், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, முக்கிய நகரங்களில் சுகாதார துறையின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

மக்கள் புதிதாக கொரோனா பூஸ்டர் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு தாய்லாந்து, ஹொங்கொங், சிங்கப்பூர் அரசுகள் அறிவுறுத்தியுள்ளன.

ஹொங்கொங்கில் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது.

சமீபத்தில் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்ததில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் விகிதம் இந்த ஆண்டில் உச்சபட்ச அளவை தொட்டுள்ளது என்று கொங்கொங் சுகாதார பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது. சிங்கப்பூரில் கடந்த மே 3 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 28 சதவீதம் அதிகரித்து 14,200 ஆக உள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கை சுமார் 30 சதவீதம் உயர்ந்துள்ளது என்று அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.



தாய்லாந்தில் பெரும்பாலும் 30-39 வயதினரிடம் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது. மே 17 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் பாதிப்பு எண்ணிக்கை 33,030 ஆக அதிகரித்துள்ளது.

முந்தைய வாரத்தில் பாதிப்பு எண்ணிக்கை 16,000 ஆக இருந்த நிலையில், தற்போது இரட்டிப்பாகியுள்ளது என்று சுகாதார துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா பரவல் குறித்து மத்திய சுகாதார துறை அதிகாரிகள் தெரிவிக்கையில்,

“இந்தியாவில் கரோனா பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது. மே 19 ஆம் திகதி நிலவரப்படி, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 257 ஆக உள்ளது. நாட்டின் மக்கள் தொகையை கருத்தில் கொள்ளும் போது இது மிகமிக குறைவு. தவிர, இது சாதாரணபாதிப்புதான்.எனவே,மருத்துவமனையில் அனுமதிக்க அவசியம் இல்லை. இருப்பினும், நிலைமையை மத்திய சுகாதார அமைச்சகம் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.” என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொதுமக்கள் பொது இடங்களில் முக கவசம் அணிவதுடன், சரியான தொற்று தடுப்பு வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று தமிழக பொது சுகாதார துறை இயக்குநர் செல்வவிநாயகம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

“உலக சுகாதார நிறுவனம் கடந்த 4 ஆம் திகதி வெளியிட்ட வாராந்திர கொரோனா அறிக்கையின்படி, தெற்கு ஆசிய நாடுகளான இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், இந்தோனேஷியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் கொரோனா பரவல் குறைவாகவே உள்ளது. மேலும், வீரியம் இழந்த ஒமைக்ரான் வைரஸின் உட்பிரிவான ஜேஎன்1 வகை தொற்றுகளே காணப்படுவதாகவும், புதிதாக உருமாறிய வைரஸ் பரவவில்லை என்றும் தெரிவித்துள்ளது. சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும் கொரோனா தொற்று விகிதம் குறைந்துள்ளது.

இந்தியாவிலும் இந்த ஆண்டில் கொரோனா பரவல் மிக குறைந்த அளவே காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எவ்வித தீவிர அறிகுறிகளும் இல்லை. கொரோனா தொற்றால் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை. ஆனாலும், பொதுமக்கள் பொது இடங்களில் முக கவசம் அணிவதுடன், சரியான தொற்று தடுப்பு வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். அறிகுறிகள் உள்ளவர்கள், குறிப்பாக காய்ச்சல், நுரையீரல் சார்ந்த இணைநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அருகில் உள்ள மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் பாடசாலை பஸ் மீது குண்டு தாக்குதல்; 4 மாணவர்கள் பலி



தென்மேற்கு பாகிஸ்தானில் இன்று பாடசாலை பஸ் மீது தற்கொலைக் கார் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் குறைந்தது 4 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். 38 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு அரசு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பதற்றமான பலுசிஸ்தான் மாகாணத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

இந்த மாகாணம் நீண்டகால கிளர்ச்சியின் களமாக இருந்து வருகிறது.

2019 ஆம் ஆண்டில் அமெரிக்காவால் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட சட்டவிரோத பலுசிஸ்தான் விடுதலை இராணுவம் உட்பட, பிரிவினைவாத குழுக்கள் தொடர்ச்சியாக இங்கு தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

குஜ்தார் மாவட்டத்தில் இராணுவத்தால் நடத்தப்படும் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக உள்ளூர் பதில் ஆணையர் யாசிர் இக்பால் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை.

இருப்பினும் பலூச் இன பிரிவினைவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி இந்தத் தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்து, மாணவர்களின் இறப்புக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களல் பல மாணவர்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் எனவும் இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கனடா முரசு

பக்கங்கள் - 3

புதன்கிழமை 21/05/2025

## கனடாவின் பல பிரதேசங்களில் பனிக்கட்டி ஏற்படும் வாய்ப்பு



C2 ▶



# கனடாவில் உணவுப் பொருள்களின் விலைகள் தொடர்ந்தும் உயர்கின்றன

கனடாவில் உணவுப் பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்லும் போக்கினை பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விலை குறைந்தாலும், உணவுப் பொருள்கள் விலை சற்று அதிகரித்துள்ளன. உணவுப் பொருள்கள் விலையேற்றம் இப்போதும் மொத்தம் செலவிடும் அளவை விட அதிகமாகவே உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

பழங்கள், காய்கறிகள், இறைச்சி உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வடைந்து செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில பொருள்கள் வேகமாக விலை உயருகிறது எனவும் உதாரணமாக மாட்டிறைச்சி மற்றும் கோபி விலை வெகுவாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும்,அலுமினியம்மீதான வரிகள் விரைவில் டின் உணவுப் பொருள்களின் விலையை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, கனடாவிலும் ஆல்பெர்டாவிலும் வாழ்வுச் செலவு கடந்த மாதத்தை விட குறைவாகவே உயர்ந்தாலும், இந்த நிதிச் சீரமைப்பின் பின்னணியில் உள்ள உண்மை நிலை அவ்வளவு நம்பிக்கை அளிக்கவில்லை என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

C2 ▶

# கனடாவின் நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைத்தார் மன்னர் சார்லஸ்



மகாராணி எலிசபெத் கனடாவின் ராணியாக இருந்தபோது, 1957ஆம் ஆண்டு, கனடாவின் நாடாளுமன்றத்தைத் ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 67 ஆண்டுகளுக்குப் பின், தற்போது மன்னர் சார்ளஸ் கனடா நாடாளுமன்றத்தைத் துவக்கி வைக்க இருக்கிறார்.

அது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு மட்டும் அல்ல. இன்றியமையாத ஒரு நிகழ்வும் ஆகும்.

காரணம், அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்ப், மன்னரின் ஆட்சியின் கீழிருக்கும் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக வெளிப்படையாகவே சொல்லிக்கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட ஒரு C2 ▶



# கனடாவின் பல பிரதேசங்களில் பனிக்கட்டி ஏற்படும் வாய்ப்பு

கனடாவின் பல பிரதேசங்களில் பனிக்கட்டி ஏற்படும் வாய்ப்பு உள்ள தாக சுற்றுச்சூழல் கனடா அறிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து மக்கள் தங்கள் தோட்டத் தாவரங்களை மூடி பாதுகாப்பதற்கான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பனிக்கட்டி எச்சரிக்கை தென்கிழக்கு ஒண்டாரியோ மற்றும் வடக்கு ஒண்டாரியோ உள்ளிட்ட பல பகுதிகளுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

அதிகமாக பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில், டொரொண்டோ பெரும்பாக பகுதியில் உள்ள ப்ரான்ட் ஃபோர்ட் – ப்ரான்ட் கவுண்டி, காலிடன், ஹால்டன் ஹில்ஸ் – மில்டன், மற்றும் நியூமார்கெட் – ஜியோர்ஜினா – வட யோர்க் பகுதி ஆகியவை அடங்குகின்றன.

“பனிக்கட்டுக்கு பாதிக்கக்கூடிய பகுதிகளில் இருக்கும் தாவரங்களை மூடி பாதுகாக்கவும்,” எனவும் அவர் எச்சரித்துள்ளனர்.

வளரும் பருவங்களில் வெப்பநிலை உறைவுக்கு கீழ் சென்றால் பனிக்கட்டி உருவாகும் வாய்ப்பு இருப்பதால், இது தாவரங்கள் மற்றும் பயிர்களுக்கு சேதம் அல்லது அழிவை ஏற்படுத்தும் அபாயம் உண்டு என்று சுற்றுச்சூழல் கனடா கூறியுள்ளது.



**கனடாவின் நடாளுமன்றத்தை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூழலில், கனடா இன்னமும் மன்னரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. கனடா விற்பனைக்கு அல்ல, இப்போதும் அல்ல, எப்போதும் அல்ல என்பதை ட்ரம்புக்கு சொல்லாமல் சொல்வதற்காக மன்னர் சார்லஸ் எடுக்கும் ஒரு நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

ஆக, சுமார் 67 ஆண்டுகளுக்குப் பின், அதுவும் சார்ளஸ் மன்னராக பதவியேற்றபின் முதன்முறையாக, அவரும் ராணியும் கனடாவுக்கு வருகை புரிய இருக்கிறார்கள்.

அடுத்த வாரம், அதாவது, மே மாதம் 26 மற்றும் 27 திகதிகளில் மன்னர் சார்லசும் ராணி கமீலாவும் கனடா வரும் நிலையில், மன்னர் சார்ள்ஸ் நாடாளுமன்றத்தைத் துவக்கிவைத்து, அரியணையில் அமர்ந்து உரையாற்ற இருக்கிறார்.

இப்படி மன்னர் அரியணையில் அமர்ந்து கனடா நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது மூன்றாவது முறையாக அமையப்போகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**கனடாவில் உணவு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவின் பொதுமக்கள் பெறும் பொருட்களின் விலை உயர்வின் அளவு தற்போது 1.7 வீதமாகவே உள்ளது. இது கடந்த மாத 2.3 வீதத்தைலிருந்து குறைடைந்துள்ளது.

ஆல்பெர்டாவில் அது 1.5 வீதம், இது கடந்த மாத 2 வீதத்திலிருந்து குறைந்தது. இந்த விலை உயர்வின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் பெட்ரோல் விலை குறைவு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெட்ரோல் விலை கடந்த வருடம் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 18.1 வீதம் குறைந்துள்ளது, எனக் கூறப்படுகிறது. இது பெரும்பாலும் கனடா அரசு எரிபொருள் மீதான கார்பன் வரியை அகற்றியதால் ஏற்பட்டதாகும் என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.



# பணவீக்கம் குறித்து அறிக்கை வெளியீடு

ஒட்டுமொத்த சந்தை கணிப்புகளின் அடிப்படையில், கனடாவின் ஏப்ரல் மாத பணவீக்க விகிதம் 1.6 வீதமாக குறைந்திருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ச் மாதத்தில் இது 2.3 வீதமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் மாத தொடக்கத்தில், கனடாவின் லிபரல் அரசு நுகர்வோர் கார்பன் வரியை நீக்கியது.

இதனால் எரிபொருள் விலையிலிருந்து ஓர் அளவு நிவாரணம் கிடைத்துள்ளது. இது பணவீக்கத்தை குறைக்கும் ஒரு காரணியாகும்.

அதே நேரத்தில், ஏப்ரல் மாதம் அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு இடையிலான வரி மோதல் நடைமுறையான, முழு முதல் மாதமாகவும் இருந்தது.

வாடிக்கையாளர்கள் சில பொருள்களுக்கு அதிகம் செலுத்தியிருந்தாலும், இதனால் பணவீக்கத்தில் உடனடி உயர்வு ஏற்பட வாய்ப்பில்லை என பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# ஒட்டாவா ஆற்றில் மர்ம சடலம் மீட்பு

மர்ம மரணம் தொடர்பில் ஒண்டாரியோ மாகாண பொலிஸார் விசாரணை அரம்பித்துள்ளனர்.

கடந்த வார இறுதியில், கிளாரன்ஸ்-ராக்லாண்ட் சமுதாயத்தின் அருகே உள்ள ஒட்டாவா ஆற்றில் ஒரு நபரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை மாலை சுமார் 5:30 மணியளவில், டெல்லேர் வீதி பகுதிக்கு அண்மையிலுள்ள ஆற்றுக் கரை பகுதியில் ஒரு சடலம் காணப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

சமூகத்திற்கு எந்தவொரு உடனடி பாதுகாப்பு அபாயமும் இல்லை என பொலிஸார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்த நபர் யார் என்பதை இதுவரை காவல்துயறயினர் அடையாளம் காணவில்லை.

விசாரணை முன்னேறியுள்ள நிலையில், அந்தப் பகுதியில் பொலிஸார் அதிகமாக காணப்படலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் தற்போது அந்த நபரின் அடையாளத்தைத் தெரிந்து கொள்வதற்காக விசாரணையை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.